DEPOSITON OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
Assistant Sessions Judge, Sankari
IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

Calender }
Miscellaneous }
Preliminary Register }
Sessions } Case No.SC.115/2023

Deposition of Witness { PW.6
{ Prosecution
{

Name : கந்தசாமி
Father's Name : ---
Taluk :---
Calling :---
Religion :---
Age :---

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.10.2024.

2024 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 01 ஆம் நாள் அரசு தரப்பு சாட்சி என்பவரின் சாட்சியாகிய அ.சா.6 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

முதல் விசாரணை

நான் தற்போது செட்டிபட்டியில் குடியிருக்கிறேன். நான் கட்டிட வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 முதல் அ.சா.3 வரையான சாட்சிகளை தெரியும். அவர்கள் எனக்கு உள்ளூர்காரர்கள் என்பதால் தெரியும். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு தேதி, மாதம், வருடம் தெரியாது ஒரு நாள் காலை 9 மணி சுமாருக்கு செட்டிப்பட்டிக்கு சம்பள பணம் வாங்குவதற்காக மண் ரோட்டில் சென்று கொண்டிருந்தேன். அப்போது வெங்கடாசலம் கருப்பணணிடம் பங்கு பிரிக்காத காட்டில் எதற்கு மண் அள்ளுகிறார் என்று கேட்டார்.

அப்போது அங்கு எதிரிகள் மண் அள்ளி கொண்டிருந்தார்கள். மண் அள்ளக்கூடாது என்று சொன்னதற்கு தேவடியா பையா கண்டாரோளி பையா உனக்கு எங்கடா இங்கு காடு இருக்கிறது என்று சொல்லி கொண்டு கருப்பண்ணன் வைத்திருந்த கருக்கருவாளால் வெட்ட வந்த போது வெங்கடாசலம் குனிந்து கொண்டதால் இடது தோள்பட்டையில் காயமானது. பின்பு லட்சுமணன் வெங்கடாசலம் மீது ஏறி அமர்ந்து பிடித்துக்கொள்ள கருப்பண்ணன் வெங்கடாசலத்தின் 2 தொடைகளையும் அறுத்து காயமானது. அதேபோல் வலது குதி காலிலும் அறுத்து காயப்படுத்தினார். அப்போது செல்லம்மாள் கத்திக்கொண்டு வீட்டிலிருந்து அங்கு ஓடிவந்தார். அப்போது 3ம் எதிரி செல்லம்மாளை முடியை பிடித்து கீழே தள்ளி காலால் மிதித்தார். பின்பு கந்தசாமி என்பவர் கத்திக்கொண்டு ஓடிவந்தார். அப்போது லட்சுமணன் கல்லால் கந்தசாமியின் பின்னந்தலையில் அடித்தார். பின்பு கருப்பண்ணன் கந்தசாமியையும் அறுவாளால் அறுக்க போன போது அவர் குனிந்து கொண்டதால் அவரது வலது தோள்பட்டையிலும் வலது உள்ளங்கையிலும் காயமானது. பின்பு அவர்கள் சத்தம்போட அங்கிருந்தவர்கள் ஆம்புலன்சில் ஏற்றி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(மற்றோரு கண்ணுட்ட சாட்சியுடன் சேர்ந்து குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது. )

Sd/-கந்தசாமி

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி